வயதுக்குட்பட்ட குழந்தைகளை உருவாக்குகின்ற பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும் கூறினார்கள். அது சம்பந்த மான பட்டியலை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

[முற்பகல் 10–30]

அதாவது பள்ளி இறுதி தேர்வு பெற்றிருந்தால் அவர்களுக்கு மாதம் 100 ரூபாய், பள்ளி இறுதி தேர்வு பெறாமல் இருந்தால் அவர்களுக்கு மாதம் 90 ரூபாய் வழங்கப்படுகிறது. அதேபோல பழங்குடியினர் பகுதிகளில் குழந்தைகள் காப்பாளர்களுக்கு பள்ளி இறுதி ஆண்டு தேர்வு பெற்றிருந்தால், மாதம் ஒன்றுக்கு 165 ரூபாய் வீதமும், பள்ளி இறுதி தேர்வு பெறாமல் இருந் தால் அவர்களுக்கு மாதம் 150 ரூபாய் வீதமும் வழங்கப்படுகிறது.

சென்னை புறநகர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அவர் களுக்கு மாதம் ஒன்றுக்கு 115 ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது, இவ்வாறு அவர்கள் பள்ளி இறுதி தேர்வு பெற்றிருந்தால் அதற் குத் தகுந்த ஊதியமும் இறுதி தேர்வு பெறாமல் இருந்தால் அதற்குத் தகுந்த ஊதியமும் கொடுக்கப்பெறுகிறது. எல்லோ ருக்கும் சமமாக கொடுக்க வேண்டும் என்றுதான் தனி நபர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவின் அறிக்கை வந்தபிறகு, உங்களுக்கு அதை நான் சமர்ப்பிக்கிறேன் என்று கூறிக் கொள்கிறேன்.

தன்னிறைவு திட்டத்தினை நிறைவேற்றி முடித்தல்.

*குறுகிய கால வினா எண் 7—திரு. என். புழனிவேல்: மாண்பு மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது நடைபெற்று வரும் தன்னிறைவுத் திட்ட வேலைகள் திட்டமிட்டபடி நிறைவேற்றி முடிக்க இன்னும் எவ்வளவு காலம் ஆகும் ?

(ஆ) வேலை நிறைவு பெறாத இடங்களில் காலத்தை மேலும் 3 மாதம் நீட்டித்தரப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) முதற்கட்டமாக தன்னிறைவுத் திட்டம் 69 ஊராட்சி ஒன்றியங்களில் செயற் படுத்தப்பட்டு வருகிறது.

1981–82-ல் இதை மேலும் 120 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படும்.

1981 மார்ச் 3]

மீதமுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் அடுத்துவரும் ஆண்டுகளில் இத்திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்,

(ஆ) எடுத்துக்கொண்ட 69 ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் 31—3—1981-க்குள் நிறைவேற்றி முடிக்கப்பட்டு விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. காலம் நீட்டித்துக் கொடுப்பதாக தற்போது உத்தேசம் இல்லை.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டம் சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதத்திற்கு பிறகு தான் ஆரம்பிக்கப்பட்டது. ஆகவே இன்றைக்கு 8, 9 மாதங்கள் கூட ஆகவில்லை. வறட்சி வேறு பல இடங்களில் வந்து விட்டது. தண்ணீர் வசதி கிடையாது. ஆகவே பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவது காப்பகங்கள் கட்டுவது போன்ற வேலைகளெல்லாம் வறட்சியின் காரணமாக தடைபட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே அதற்கு அவசியம் காலத்தை நீட்டித்துக் கொடுக்க அரசு மறு பரிசிலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் 31—3—1981-க்குள் முடிக்கப் பட்டு விட வேண்டும் என்று தான் அரசு ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. வேலைகள் துரிதமாக நடைபெற வேண்டும் என்றே பிறக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, உறுப்பினர் அவர்கள் கேட்கக் கூடிய கேள்வியிலிருந்து, தயவுசெய்து அதிகாரிகளை அணுகி கால நீட்டிப்புக்கு அனுமதி பெற முயற்சி செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் 31—3—1981-க்குள் வேலைகள் கண்டிப்பாக முடிந்தாக வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு ஸ்டிரிக்கடாக ஆணைகள் போட்டிருக்கிறோம். ஆகவே, கேட்கப்படுகிற கேள்விகளையும் அதற்கு ஒத்ததாக கேட்டால் நலமாக இருக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தன்னிறைவுத் திட்டம் குறிப்பிட்ட காலத்திற்குள் போதிய அளவு நடைபெறாததற்குக் காரணம் போதிய அதிகாரிகள் இல்லை என்பதுதான் என்று சொல்கிறார்கள். ஆகவே அதிக ஊழியர்களையும் அதிக அதிகாரிகளையும் போட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்திற்கென ஏற்கெனவே அதிக ஊழியர்களும் அதிகாரிகளும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் மீதோ அரசின் மீதோ நான் குறையாக ஏதும் சொல்லவில்லை. நல்ல முறையில் அதிகாரிகள் சுறு சுறுப்பாகத் தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இயற்கைச் சூழ்நிலைக் காரணமாக இன்றைக்கு முடிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்படி குறிப்பிட்ட தேதிக்குள் முடித் துத்தான் ஆகவேண்டும் என்று அவசரப்படுத்தினால் அந்த வேலைகள் தரமற்ற வேலைகளாக, போலியான வேலைகளாக, பிர யோஜனம் இல்லாத வேலைகளாகத்தான் முடிக்க முடியும். ஆகவே இப்பொழுது இதை மேலும் விரிவு படுத்தும்போது அதை ஓராண்டுக்கு கொடுக்கப் போகிறீர்கள். இது சென்ற ஆகஸ்ட் மாதம் தான் துவங்கியது. . . . (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேட்க விரும்புவதை சுருக்கமான கேள்வியாகக் கேளுங்கள். சொற்பொழிவு நடத்த வேண்டாம்.

திரு. என். பழனிவேல் : ஏற்கெனவே அமுலில் இருக்கும் வேலைகள் ஆகஸ்ட் மாத இறுதியில்தான் ஆரம்பிக்கப்பட்டன. சாலைகள் அமைத்தல் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல், குடி தண்ணீர் வசதி செய்தல், காப்பகங்கள், டிஸ்பென்சரிகள் கட்டுதல், கக்கூஸ்கள் கட்டுதல் மின் விளக்குகள் போடுதல் போன்று பல வேலைகள் இருக்கின்றன. இப்படி அதை விரைவு படுத்தினால் . . . . (மணி அடிக்கப்பெற்றது).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : முதல் கட்டமாக நாம் எடுத்துக்கொண்டது 69 ஒன்றியங்களில்தான். 69 ஊராட்சி ஒன்றியங்களில் என்ன வேலைகள், எவ்வளவு வேலை கள் என்பதைப்பற்றி ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டு அதற்கு வேண்டிய ஊழியர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய பணமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும் செய்யப் படக்கூடிய வேலைகளின் க்வாலிட்டியும் நன்றாக இருக்க வேண்டும் என்று உத்தரவு இடப்பட்டிருக்கிறது. ஆகவே அவசரக்கோலத்தில் அள்ளத்தெளித்தாற்போன்ற நிலைக்கு இடம் ஏற்படாது. வறட்சி இருந்தால், அந்தப் பகுதிகளுக்கு என்னென்ன வேலைகளுக்கு ரா மெட்டீரியல்ஸ் தேவையோ அவ்வளவும் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளுக்குள்ளாக இந்த வேலைகள் முடிக்கப்படவேண்டும்.

திரு. கு. ப. பழனியப்பன் : இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படும் ஊராட்சி ஒன்றியங்கள் வரிசைப் படுத்தும்வகையில் எந்தத் தகுதியின் அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்படுகிறது? விழுப்புரத்தில், போலியனூர் காணை போன்ற ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில் அவை இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தும் நீக்கப்பட்டி

ருக்கிறது. அது அரசியல் காரணமாக புறக்கணிக்கப்பட்டி ருக்கின்றன என்று பொது மக்கள் கூறுவது அரசுக்குத் தெரியுமா? ஆகவே அதைப்பற்றி மறுபரிசீலனை செய்வதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: எந்த ஒன்றியத்தையும் ஒதுக்கவேண்டும் என்ற தனிப்பட்ட எண்ணம் அரசுக்குக் கிடையாது. குறிப்பாக 376 ஒன்றியங்களையும் எடுத்துக்கொள்ள வேண்டும், மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும் என்ற முறையில்தான் தன்னிறைவுத் திட்டத்தை அமுல்படுத்திக் கொண் டிருக்கிறோம். எந்தெந்தப் பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு இருக் கிறதோ அவற்றிற்கு முன் உரிமை கொடுத்து எடுத்துக்கொண்டு வேலைகள் செய்யப்படுகின்றன. அரசியல் காரணமாக எந்த ஒன்றி யமும் ஒதுக்கப்படவில்லை. அப்படிப்பார்த்தால் திராவிட முன்னேற் றக் கழக உறுப்பினர்கள் எந்தெந்தப் பகுதிகளில் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்களோ அந்தப் பகுதிகளில்—இரண்டு ஒன்யறிங்கள் ஒரு தொகுதியிலேயே எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அறித்து, ஒத்திவைப்புத் தீர்மானம்.

திரு. அ. ரகுமான்கான். கேள்வி நேரம் முடிந்தவுடன் பேரவை விதிகளுக்கு இணங்க, உரிமைப்பிரச்னை கொடுக்கப் பட்டிருக்குமானால், அது எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுக்கப்பெற்றுள்ள உரிமைப் பிரச்னை என் ஆய்வில் இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான்: * *

.. .. ..

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS